**South India Finvest Pvt Ltd**
Making a Difference

# நியாயமான நடைமுறைகளின் விதித்தொகுப்பு (Fair Practice Code)

வங்கி சாரா நிதி நிறுவனங்கள் கடைபிடிக்கவேண்டிய, நியாயமான நடைமுறைகளின் விதித்தொகுப்பு பற்றிய இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அறிவிப்பினை (Cicular No DNBR.PD.007/03.10.119/2016-17) மையமாகக் கொண்டு சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் வெளிப்படைதன்மை மற்றும் நியாயமான கடன் வழங்கும் நடைமுறைகளை பின்பற்ற பல வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி வருகிறது.

இந்த நியாயமான நடைமுறைகளின் விதி தொகுப்பானது (Fair Practices Code), சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் (South India Finvest Pvt Ltd) நிறுவனத்தின் வெளிப்படைத்தன்மை, கடன் பெறுபவர்களை கையாளும் நெறிமுறைகள் மற்றும் அவர்களை நிறுவனம் எவ்வாறு வழிநடத்த விரும்புகிறது என்பதை விளக்கும்.

இந்த கொள்கையானது, இந்நிறுவனத்தின், இந்தியாவில் உள்ள அனைத்து கிளைகள் மற்றும் தலைமை அலுவலகத்தின் அனைத்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்களும் இது பொருந்தும்.

இந்த விதிதொகுப்பின் பொதுவான கொள்கைகளை எடுத்துரைக்கும் வகையில் சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் (South India Finvest Pvt Ltd) நிறுவனம் பின்வரும் நியாயமான நடைமுறைகளை பின்பற்றுகிறது,

## 1. பொதுவானவை:

i. நிறுவனத்தின் நியாயமான நடைமுறைகளின் விதிதொகுப்பானது, அந்தந்த பகுதிகளின் உள்ளூர்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு ஒவ்வொரு கிளை அலுவலகத்திலும் பார்வைக்கு உகந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

ii. நிறுவனத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உணர்த்தும் வகையில் கடன் விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தமானது, அந்தந்த பகுதிகளின் உள்ளூர் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு கடன் பெறுபவர்கள் புரிந்துகொள்ளும் வகையில், அதில் உள்ள தகவல்கள் விளக்கப்படுகிறது.

iii. கடன் பெறுபவரின் முந்தைய கடன் பற்றிய விவரங்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள கள ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

iv. கடன் பெறுபவர்களுக்கு ஏதேனும் பயிற்சி தேவைப்படும் பட்சத்தில், அது இலவசமாக வழங்கப்படும். கடன் அல்லது மற்ற சேவைகளின் செயல்முறை பற்றி கடன் பெறுபவர்களுக்கு முழுமையாக பயிற்சியளிக்க கள அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

v. கடன் குறித்த விவரங்கள் மற்றும் நிறுவனத்தால் வரையறுக்கப்பட்ட குறைதீர்க்கும் முறை ஆகியவை நிறுவனத்தின் அனைத்து அலுவலகங்கள் மற்றும் வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

vi. சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் (South IndiaFinvest Pvt Ltd) நிறுவனமானது, கள அதிகாரிகளின் சேவையில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அதனை சிறப்பு பயிற்சிகளின் மூலம் உடனடியாக சரிசெய்யும்.

vii. இந்திய ரிசர்வ் வங்கியின் KYC வழிகாட்டுதலின் இணக்கத்தை உறுதிசெய்வதற்கும், கடன் வாங்குபவராது திருப்பிச் செலுத்தும் திறனை உறுதி செய்வதற்கும் நிறுவனம் தேவையான கவனம் செலுத்த பொறுப்பேற்றுள்ளது.

viii. கடன் அனுமதி மற்றும் கடன் வழங்கல் ஆகியவை ஒரு பொதுவான இடத்தில், ஒன்றுக்கும் மேற்பட்டவர்களால் செயல்படுத்தப்பட்டு தணிக்கை அதிகாரியால் மேற்பார்வை செய்யப்படுகிறது.

ix. கடன் விண்ணப்பிப்பதற்கான செயல்முறை சிக்கலானதாக இல்லாமல் இருக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நேரகட்டமைப்பின் படி கடன் வழங்கல் செயல்படுத்தப்படுகிறது.

x. கடன் வாங்குபவரின் தரவுகளின் தனியுரிமை மதிக்கப்பட்டு பாதுகாக்கப்படும்.

xi. கடன் வாங்குபவரிடமிருந்து பாதுகாப்பு வைப்புத் தொகை எதுவும் சேகரிக்கப்படாது. மேலும், தாமதமாக பணம் செலுத்துவதற்கு எந்தவிதமான கட்டணமும் விதிக்கப்படாது.

xii. கடன் வழங்கப்பட்ட நாளில் இருந்து வரும் முதல் தவணைத் தேதியானது கடன் வாங்குபவரின் ஒப்புதல் பெற்றே தீர்மானிக்கப்படுகிறது.

xiii. கடன் அல்லாத சேவைகள் கடன் வாங்குபவர்களின் முழு ஒப்புதலுடன் மட்டுமே வழங்கப்படுகிறது

## 2. கடன் ஒப்பந்தம் மற்றும் கடன் அட்டையின் வெளிப்படைத்தன்மைகள்:

- சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் (South IndiaFinvest Pvt Ltd) நிறுவனமானது, இயக்குனர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிலையான கடன் ஒப்பந்தம் மற்றும் கடன் அட்டையை கொண்டுள்ளது.
- <u>நிறுவனம் கீழ்காணும் விவரங்களை வெளிப்படையான மற்றும் புரிந்துகொள்ள கூடிய வகையில் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்,</u>

i. வட்டி வீதம், செயலாக்ககட்டணம் மற்றும் காப்பீட்டுத் தொகை

ii. கடன் விண்ணப்பித்த தேதி, மொத்த தவணைகள் மற்றும் திருப்பிச்செலுத்த வேண்டிய கால அளவு

iii. கடனுக்குண்டான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்.

iv. முன்கூட்டியே செத்துத்தும் தவணை தொகையை கிளை அலுவலகத்தில் மட்டுமே செலுத்த வேண்டும் எனவும்,

v. பெறப்படும் கடன் தொடர்பான தகவல்கள் அனைத்தும் கடன் பணியகத்தில் பதிவேற்றப்படும் எனவும் விளக்கப்பட்டிருக்கும்.

vi. தவணை தொகை செலுத்தும் போது கட்டாயமாக அதற்குரிய ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கும்.

- <u>நிறுவனத்தின் கடன் அட்டையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்கள்</u>

i. கடனுக்குண்டான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்.

ii. வட்டி வீதம், கடன் வழங்கப்பட்ட தேதி, திரும்பிச் செலுத்த வேண்டிய தவணை தேதிகள் மற்றும் தவணைகளின் மொத்த எண்ணிக்கை ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

iii. கடன் அட்டையில், தவணை தொகை பெறப்படுதல் மற்றும் கடன் முடித்ததற்கான ஒப்புதல் நிறுவனத்தின் கள அதிகாரியால் வழங்கப்படும்.

iv. நிறுவனத்தின் வலுவான கடன் வழங்கும் நடைமுறைகளின் உறுதிப்பாட்டுக்கு இணங்க, தொடர்ந்து பயிற்சியளிப்பதன் மூலம் ஊழியர்களின் தகாத நடத்தையைத் தடுக்க நிறுவனத்தால் அமைக்கப்பட்ட குறைதீர்க்கும் மற்றும் நோடல் அதிகாரியின் பெயர் மற்றும் தொடர்பு எண் ஆகியவை கடன் அட்டையில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

v. கடன் அட்டையில் உள்ள விவரங்கள் அந்தந்த உள்ளூர் மொழியில் அல்லது கடன் வாங்குபவர் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கடன் வாங்குபவருக்கு எல்லா தகவல்களும் விளக்கப்படும்.

## 3. கடன் மீட்பு முறைகள்:

i. குழு உறுப்பினர்களால் முடிவு செய்யப்பட்ட அனைவருக்கும் பொதுவான இடத்தில் மட்டுமே தவணை தொகை வசூலிக்கப்படுகிறது. உறுப்பினர்களில் யாரேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளை, அத்தகைய பொது இடத்திற்கு வந்து கட்டத் தவறும் பட்சத்தில் மட்டுமே, கள அதிகாரியால் கடன் பெற்றவர் வசிக்கும் அல்லது பணியாற்றும் இடத்திற்கு சென்று தவணை தொகையை வசூல் செய்யப்படும்.

ii. நிறுவனத்திடம் கள அதிகாரிகளை பணியமர்த்துவர்க்கும், அவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும், அவர்களை மேற்பார்வை செய்வதற்கும் உரிய கொள்கைகள் இருக்கிறது. மேலும், கள அதிகாரிகள், கடன் பெறுபவர்களிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்தும் பயிற்சியளிக்கப்படுகிறது.

iii. கள அதிகாரிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையானது, வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை அல்லது தொகையை பொறுத்து மட்டுமே அமையாமல் கள அதிகாரிகளின் நன்னடத்தை மற்றும் அணுகுமுறையையும் பொறுத்து வழங்கப்படுவதால் அதிகாரிகளின் அணுகுமுறை மிக சிறப்பாக இருப்பதை நிறுவனம் உறுதிசெய்கிறது. மேலும் நிறுவனம் தனது கள அதிகாரிகளைத் தவிர வேறு நபர் யாரும் தவணைத் தொகையை வசூலிக்க அனுமதிப்பதில்லை.

## 4. வாடிக்கையாளர் பாதுகாப்பு வழிமுறைகள்

i. சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் (South India Finvest Pvt Ltd) நிறுவனமானது தனது அதிகப்படியான வளங்களை சுயஉதவிகுழுக்களின் தொழில்முறை உள்ளீடுகளுக்காக அர்ப்பணிப்பதற்கும், உறுப்பினர்களின் திறன்மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்துகிறது.

ii. சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் (South India Finvest Pvt Ltd) நிறுவனமானது, உறுப்பினர்களுக்கு தேவைக்கு அதிகமாக கடன் பெறுவதால் ஏற்படும் சிக்கல் குறித்து விழிப்புணர்வு செய்வதை கொள்கையாக கொண்டுள்ளது.

iii. ஏதேனும் புகார் அல்லது குறை இருக்குமேயானால், விண்ணப்பதாரர் அல்லது கடன் வாங்கியவர் கார்ப்பரேட் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் (தொடர்பு கொள்ளவேண்டிய கைப்பேசி எண்ணானது நிறுவனத்தின் வலைத்தளம் மற்றும் கடன் அட்டையில் கொடுக்கப்பட்டுள்ளது)

## குறைதீர்க்கும் / நோடல் அதிகாரி

பெயர்: திரு. நிக்கில் ரோசர்
தொடர்பு எண்: 9585510143
மின்னஞ்சல்: nickelrozar@sifinvest.com / customercare@sifinvest.com
இணையதளம்:

South India Finvest Pvt Ltd
Making a Difference

# நியாயமான நடைமுறைகளின் விதித்தொகுப்பு (Fair Practice Code)

வங்கி சாரா நிதி நிறுவனங்கள் கடைபிடிக்கவேண்டிய, நியாயமான நடைமுறைகளின் விதித்தொகுப்பு பற்றிய இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அறிவிப்பினை (Cicular No DNBR.PD.007/03.10.119/2016-17) மையமாகக் கொண்டு சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் வெளிப்படைதன்மை மற்றும் நியாயமான கடன் வழங்கும் நடைமுறைகளை பின்பற்ற பல வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி வருகிறது.

இந்த நியாயமான நடைமுறைகளின் விதி தொகுப்பானது (Fair Practices Code), சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் (South India Finvest Pvt Ltd) நிறுவனத்தின் வெளிப்படைத்தன்மை, கடன் பெறுபவர்களை கையாளும் நெறிமுறைகள் மற்றும் அவர்களை நிறுவனம் எவ்வாறு வழிநடத்த விரும்புகிறது என்பதை விளக்கும்.

இந்த கொள்கையானது, இந்நிறுவனத்தின், இந்தியாவில் உள்ள அனைத்து கிளைகள் மற்றும் தலைமை அலுவலகத்தின் அனைத்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்களும் இது பொருந்தும்.

இந்த விதிதொகுப்பின் பொதுவான கொள்கைகளை எடுத்துரைக்கும் வகையில் சௌத் இந்தியா ஃபின்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் (South India Finvest Pvt Ltd) நிறுவனம் பின்வரும் நியாயமான நடைமுறைகளை பின்பற்றுகிறது,

முகவரி: 3/490, 1st floor NS Towers, pudhunagar, MTP Road, Annur,
Coimbatore - 641653.